தினமணி (01.08.2019)

டிஎன்பிஎல் சார்பில்

# 1, 000 மரக்கன்றுகள் நடும் விழா துவக்கம்

**கரூர், ஜூலை 31:** தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், மத்திய அரசின் ஜல் சக்தி அபியான் திட்டத்தின் கரூர் மாவட்ட பிரிவுடன் இணைந்து 1,000 மரக்கன்றுகள் நடுவதற்கான தொடக்க விழா கரூர் மாவட்டம், சோமூர் ஊராட்சிக்குட்பட்ட திருமுக்கூடலூரில் திங்கள்கிழமை நடைபெற்றது.

விழாவிற்கு, நீர் மேலாண்மை திட்ட ஒருங்கிணைப்பாளர் (ஜல் சக்தி அபியான்) உஷா சுரேஷ் தலைமை வகித்தார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எஸ்.கவிதா மரக்கன்றுகள் நட்டு விழாவைத் தொடக்கி வைத்தார்.

விழாவில் காகித நிறுவனத்தின் முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) பா.பட்டாபிராமன், முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி) கு.தங்கராஜூ, பொது மேலாளர் ரா.சீனிவாசன் (வனத் தோட்டம்) உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதில் காகித ஆலை சார்பில் வேம்பு, ஆலமரம், புங்கை, இலுப்பை, போன்ற 22 வகையான 1000 மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.




திருமுக்கூடலூரில் மரக்கன்று நடும்பணியைத் துவக்கி வைக்கிறார் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எஸ்.கவிதா. உடன், நீர் மேலாண்மை திட்ட ஒருங்கிணைப்பாளர் (ஜல் சக்தி அபியான்) உஷா சுரேஷ் மற்றும் ஆலை அதிகாரிகள் உள்ளிட்டோர்.